ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருக்கண்ணபுரம்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க₃ராமானுஜ மஹாதே₃ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருக்கண்ணபுரம்

## பொதுத்தனியன்கள்

ராமாநுஜ த$_3$யாபாத்ரம் ஜ்ஞாநவைராக்$_3$ய பூ$_4$ஷணம் ।
ஸ்ரீமத்$_3$வேங்கடநாதா$_2$ர்யம் வந்தே$_3$ வேதா$_3$ந்ததே$_3$ஶிகம் ॥ **1** ॥

ஸ்ரீஶைலேஶ த$_3$யாபாத்ரம் தீ$_4$ப$_4$க்த்யாதி$_3$கு$_3$ணார்ணவம் ।
யதீந்த்$_3$ரப்ரவணம் வந்தே$_3$ ரம்யஜாமாதரம் முநிம் ॥ **2** ॥

லக்ஷ்மீநாத$_2$ஸமாரம்பா$_4$ம் நாத$_2$யாமுநமத்$_4$யமாம் ।
அஸ்மதா$_3$சார்யபர்யந்தாம் வந்தே$_3$ கு$_3$ருபரம்பராம் ॥ **3** ॥

யோ நித்யமச்யுதபதா$_3$ம்பு$_3$ஜயுக்$_3$மருக்ம -
வ்யாமோஹதஸ்ததி$_3$தராணி த்ரு'ணாய மேநே ।
அஸ்மத்$_3$கு$_3$ரோர்ப$_4$க$_3$வதோஸ்ய த$_3$யைகஸிந்தோ$_4$:
ராமாநுஜஸ்ய சரணௌ ஶரணம் ப்ரபத்$_3$யே ॥ **4** ॥

மாதா பிதா யுவதயஸ்தநயா விபூ$_4$தி:
ஸர்வம் யதே$_3$வ நியமேந மத$_3$ந்வயாநாம் ।
ஆத்$_3$யஸ்ய ந: குலபதேர்வகுளாபி$_4$ராமம்
ஸ்ரீமத் தத$_3$ங்க்$_4$ரியுக$_3$ளம் ப்ரணமாமி மூர்த்$_4$நா ॥ **5** ॥

பூ$_4$தம் ஸரஶ்ச மஹதா$_3$ஹ்வய ப$_4$ட்டநாத$_2$
ஸ்ரீப$_4$க்திஸார குலஶேக$_2$ர யோகி$_3$வாஹாந் ।
ப$_4$க்தாங்க்$_4$ரிரேணு பரகால யதீந்த்$_3$ர மிஶ்ராந்
ஸ்ரீமத் பராங்குஶமுநிம் ப்ரணதோऽஸ்மி நித்யம் ॥ **6** ॥

## பெரியாழ்வார் தனியன்கள்

கு$_3$ருமுக$_2$மநதீ$_4$த்ய ப்ராஹ வேதா$_3$நஶேஷாந்
நரபதிபரிக்லு’ப்தம் ஶுல்கமாதா$_3$துகாம:।
ஶ்வஶுரமமரவந்த்$_3$யம் ரங்க$_3$நாத$_2$ஸ்ய ஸாக்ஷாத்
த்$_3$விஜகுலதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி ॥

மின்னார் தட மதிள் சூழ் வில்லிபுத்தூர் என்றொரு கால் ⋆
சொன்னார் கழற்கமலம் சூடினோம் ⋆
முன்னாள் கிழி அறுத்தான் என்றுரைத்தோம் ⋆
கீழ்மையினிற் சேரும் வழி அறுத்தோம் நெஞ்சமே ! வந்து

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தான் என்று ⋆
ஈண்டிய சங்கம் எடுத்தூத ⋆
வேண்டிய வேதங்களோதி விரைந்து கிழி அறுத்தான் ⋆
பாதங்கள் யாமுடைய பற்று

## பெரியாழ்வார் திருமொழி – திருப்பல்லாண்டு

‡ பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு ⋆
பல கோடி நூறாயிரம் ⋆
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா ! ⋆
உன் சேவடி செவ்வி திருக்காப்பு ॥ **1.1.1** ॥

‡ அடியோமோடும் நின்னோடும் ⋆
பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு ⋆
வடிவாய் நின் வல மார்பினில் ⋆
வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு ⋆
வடிவார் சோதி வலத்துறையும் ⋆
சுடராழியும் பல்லாண்டு ⋆

படை போர் புக்கு முழங்கும் ⋆
அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே ‖ **1.1.2** ‖

வாழாட் பட்டு நின்றீர் உள்ளீரேல் ⋆
வந்து மண்ணும் மணமும் கொண்மின் ⋆
கூழாட் பட்டு நின்றீர்களை ⋆
எங்கள் குழுவினில் புகுதலொட்டோம் ⋆
ஏழாட் காலும் பழிப்பிலோம் நாங்கள் ⋆
இராக்கதர் வாழ் ⋆
இலங்கை பாழாளாகப் படை பொருதானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ‖ **1.1.3** ‖

ஏடு நிலத்தில் இடுவதன் முன்னம் வந்து ⋆
எங்கள் குழாம் புகுந்து ⋆
கூடு மனம் உடையீர்கள் வரம்பொழி ⋆
வந்தொல்லைக் கூடுமினோ ⋆
நாடு நகரமும் நன்கறிய ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பாடு மனம் உடைப் பத்தர் உள்ளீர் ! ⋆
வந்து பல்லாண்டு கூறுமினே ‖ **1.1.4** ‖

அண்டக்குலத்துக்கதிபதி ஆகி ⋆
அசுரர் இராக்கதரை ⋆
இண்டைக் குலத்தை எடுத்துக் களைந்த ⋆
இருடீகேசன் தனக்கு ⋆
தொண்டக் குலத்தில் உள்ளீர் ! வந்தடி தொழுது ⋆
ஆயிர நாமம் சொல்லி ⋆

பண்டைக் குலத்தைத் தவிர்ந்து ⋆
பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்மினே ॥ **1.1.5** ॥

எந்தை தந்தை தந்தை தந்தை தம் மூத்தப்பன் ⋆
ஏழ் படி கால் தொடங்கி ⋆
வந்து வழிவழி ஆட்செய்கின்றோம் ⋆
திருவோணத் திருவிழவில் அந்தியம் போதில் அரியுருவாகி ⋆
அரியை அழித்தவனை ⋆
பந்தனை தீரப் பல்லாண்டு ⋆
பல்லாயிரத்தாண்டென்று பாடுதுமே ॥ **1.1.6** ॥

தீயிற் பொலிகின்ற செஞ்சுடர் ஆழி ⋆
திகழ் திருச்சக்கரத்தின் ⋆
கோயிற்பொறியாலே ஒற்றுண்டு நின்று ⋆
குடிகுடி ஆட்செய்கின்றோம் ⋆
மாயப் பொருபடை வாணனை ⋆
ஆயிரந் தோளும் பொழி குருதி பாய ⋆
சுழற்றிய ஆழி வல்லானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.7** ॥

நெய்யிடை நல்லதோர் சோறும் ⋆
நியதமும் அத்தாணிச் சேவகமும் ⋆
கையடைக் காயும் கழுத்துக்குப் பூணொடு ⋆
காதுக்குக் குண்டலமும் ⋆
மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்து ⋆
என்னை வெள்ளுயிர் ஆக்க வல்ல ⋆
பையுடை நாகப் பகைக்கொடியானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுவனே ॥ **1.1.8** ॥

உடுத்துக் களைந்த நின் பீதகவாடை உடுத்துக் ⋆
கலத்ததுண்டு ⋆
தொடுத்த துழாய்மலர் சூடிக் களைந்தன ⋆
சூடுமித்தொண்டர்களோம் ⋆
விடுத்த திசைக் கருமம் திருத்தித் ⋆
திருவோணத் திருவிழவில் ⋆
படுத்த பைந்நாகணைப் பள்ளிகொண்டானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.9** ॥

எந்நாள் எம்பெருமான் ⋆
உன்தனக்கடியோம் என்றெழுத்துப்பட்ட அந்நாளே ⋆
அடியோங்கள் அடிக்குடில் ⋆
வீடு பெற்றுய்ந்தது காண் ⋆
செந்நாள் தோற்றித் ⋆
திருமதுரையுள் சிலைகுனித்து ⋆
ஐந்தலைய பைந்நாகத் தலை பாய்ந்தவனே ! ⋆
உன்னைப் பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.10** ॥

‡ அல்வழக்கொன்றும் இல்லா ⋆
அணி கோட்டியர் கோன் ⋆
அபிமான துங்கன் செல்வனைப்போலத் ⋆
திருமாலே ! நானும் உனக்குப் பழவடியேன் ⋆
நல்வகையால் நமோ நாராயணாவென்று ⋆
நாமம் பல பரவி ⋆
பல்வகையாலும் பவித்திரனே ! ⋆
உன்னைப் பல்லாண்டு கூறுவனே ॥ **1.1.11** ॥

‡ பல்லாண்டென்று பவித்திரனைப் ⋆
பரமேட்டியை ⋆
சார்ங்கம் என்னும் வில்லாண்டான் தன்னை ⋆
வில்லிபுத்தூர் விட்டுசித்தன் விரும்பிய சொல் ⋆
நல்லாண்டென்று நவின்றுரைப்பார் ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பல்லாண்டும் பரமாத்மனைச் ⋆
சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே ‖ **1.1.12** ‖

## பெரியாழ்வார் திருமொழி – உய்யவுலகு

‡ உன்னையும் ஒக்கலையில் கொண்டு தம் இல் மருவி ⋆
உன்னொடு தங்கள் கருத்தாயின செய்துவரும் ⋆
கன்னியரும் மகிழக் கண்டவர் கண் குளிரக் ⋆
கற்றவர் தெற்றிவரப் பெற்ற எனக்கருளி ⋆
மன்னு குறுங்குடியாய் ! வெள்ளறையாய் ! ⋆
மதிள் சூழ் சோலை மலைக்கரசே ! கண்ணபுரத்தமுதே ! ⋆
என் அவலம் களைவாய் ! ஆடுக செங்கீரை ⋆
ஏழ் உலகும் உடையாய் ! ஆடுக ஆடுகவே ‖ **1.6.8** ‖

## நாச்சியார் திருமொழி – தெள்ளியார் பலர்

‡ காட்டில் வேங்கடம் ⋆
கண்ண புர நகர் ⋆
வாட்டம் இன்றி ⋆
மகிழ்ந்துறை வாமனன் ⋆
ஓட்டரா வந்து ⋆
என் கைப் பற்றி ⋆

தன்னொடும் கூட்டு மாகில் ⋆
நீ கூடிடு கூடலே ! ‖ **4.2** ‖

## பெருமாள் திருமொழி – மன்னு புகழ்

‡ மன்னு புகழ் கௌசலை தன் ⋆
மணிவயிறு வாய்த்தவனே ⋆
தென் இலங்கைக் கோன் முடிகள் ⋆
சிந்துவித்தாய் செம் பொன் சேர் ⋆
கன்னி நன் மா மதிள் புடை சூழ் ⋆
கணபுரத்தென் கருமணியே ⋆
என்னுடைய இன்னமுதே ⋆
இராகவனே ! தாலேலோ ! ‖ **8.1** ‖

புண்டரிக மலர் அதன் மேல் ⋆
புவனி எல்லாம் படைத்தவனே ⋆
திண் திறலாள் தாடகை தன் ⋆
உரம் உருவச் சிலை வளைத்தாய் ⋆
கண்டவர் தம் மனம் வழங்கும் ⋆
கணபுரத்தென் கருமணியே ⋆
எண்டிசையும் ஆள் உடையாய் ⋆
இராகவனே ! தாலேலோ ! ‖ **8.2** ‖

கொங்கு மலி கருங்குழலாள் ⋆
கௌசலை தன் குல மதலாய் ⋆
தங்கு பெரும் புகழ்ச் சனகன் ⋆
திரு மருகா தாசரதீ ⋆
கங்கையிலும் தீர்த்த மலி ⋆
கணபுரத்தென் கருமணியே ⋆

எங்கள் குலத்தின் அமுதே ⋆
இராகவனே ! தாலேலோ ! ‖ **8.3** ‖

தாமரை மேல் அயன் அவனைப் ⋆
படைத்தவனே ⋆
தயரதன் தன் மாமதலாய் ⋆
மைதிலி தன் மணவாளா ! ⋆
வண்டினங்கள் காமரங்கள் இசை பாடும் ⋆
கணபுரத்தென் கருமணியே ⋆
ஏமருவும் சிலை வலவா ⋆
இராகவனே ! தாலேலோ ! ‖ **8.4** ‖

பார் ஆளும் படர் செல்வம் ⋆
பரத நம்பிக்கே அருளி ⋆
ஆரா அன்பிளையவனோடு ⋆
அருங்கானம் அடைந்தவனே ⋆
சீர் ஆளும் வரை மார்பா ⋆
திருக் கண்ண புரத்தரசே ⋆
தார் ஆளும் நீண் முடி ⋆
என் தாசரதீ ! தாலேலோ ! ‖ **8.5** ‖

சுற்றம் எல்லாம் பின் தொடரத் ⋆
தொல் கானம் அடைந்தவனே ⋆
அற்றவர்கட்கரு மருந்தே ⋆
அயோத்தி நகர்க்கதிபதியே ⋆
கற்றவர்கள் தாம் வாழும் ⋆
கணபுரத்தென் கருமணியே ⋆

சிற்றவை தன் சொற் கொண்ட ⋆
சீராமா ! தாலேலோ ! ‖ **8.6** ‖

ஆலின் இலைப் பாலகனாய் ⋆
அன்றுலகம் உண்டவனே ⋆
வாலியை கொன்றரசு ⋆
இளைய வானரத்துக்களித்தவனே ⋆
காலின் மணி கரை அலைக்கும் ⋆
கணபுரத்தென் கருமணியே ⋆
ஆலி நகர்க்கதிபதியே ⋆
அயோத்திமனே ! தாலேலோ ! ‖ **8.7** ‖

மலை அதனால் அணை கட்டி ⋆
மதிள் இலங்கை அழித்தவனே ⋆
அலை கடலைக் கடைந்து ⋆
அமரர்க்கமுதருளிச் செய்தவனே ⋆
கலை வலவர் தாம் வாழும் ⋆
கணபுரத்தென் கருமணியே ⋆
சிலை வலவா சேவகனே ⋆
சீராமா ! தாலேலோ ! ‖ **8.8** ‖

தளை அவிழும் நறுங்குஞ்சித் ⋆
தயரதந் தன் குல மதலாய் ⋆
வளைய ஒரு சிலை அதனால் ⋆
மதிள் இலங்கை அழித்தவனே ⋆
களை கழுநீர் மருங்கலரும் ⋆
கணபுரத்தென் கருமணியே ⋆

இளையவர்கட்கருள் உடையாய் ⋆
இராகவனே ! தாலேலோ ! ॥ **8.9** ॥

‡ தேவரையும் அசுரரையும் ⋆
திசைகளையும் படைத்தவனே ⋆
யாவரும் வந்தடிவணங்க ⋆
அரங்க நகர்த் துயின்றவனே ⋆
காவிரி நல் நதி பாயும் ⋆
கணபுரத்தென் கருமணியே ⋆
ஏவரி வெஞ்சிலை வலவா ⋆
இராகவனே ! தாலேலோ ! ॥ **8.10** ॥

‡ கன்னி நன் மா மதிள் புடை சூழ் ⋆
கணபுரத்தென் காகுத்தன் தன் அடிமேல் ⋆
தாலேலோ என்றுரைத்த ⋆
தமிழ் மாலை ⋆
கொல் நவிலும் வேல் வலவன் ⋆
குடைக் குலசேகரன் சொன்ன ⋆
பன்னிய நூல் பத்தும் வல்லார் ⋆
பாங்காய பத்தர்களே ॥ **8.11** ॥

## பெரிய திருமொழி – சிலையிலங்கு

‡ சிலை இலங்கு பொன் ஆழி ⋆
திண் படை தண்டொண் சங்கம் என்கின்றாளால் ⋆
மலை இலங்கு தோள் நான்கே ⋆
மற்றவனுக்கெற்றே காண் ! என்கின்றாளால் ⋆
முலை இலங்கு பூம் பயலை ⋆
முன்போட அன்போடி இருக்கின்றாளால் ⋆

கலை இலங்கு மொழியாளர் ⋆
கண்ணபுரத்தம்மானைக் கண்டாள் கொலோ ‖ **8.1.1** ‖

‡ செருவரை முன் ஆசறுத்த ⋆
சிலை அன்றோ கைத்தலத்ததென்கின்றாளால் ⋆
பொரு வரைமுன் போர் தொலைத்த ⋆
பொன் ஆழி மற்றொரு கை என்கின்றாளால் ⋆
ஒருவரையும் நின் ஒப்பார் ⋆
ஒப்பிலா என்னப்பா ! என்கின்றாளால் ⋆
கருவரை போல் நின்றானைக் ⋆
கண்ணபுரத்தம்மானைக் கண்டாள் கொலோ ‖ **8.1.2** ‖

துன்னு மா மணி முடி மேல் ⋆
துழாய் அலங்கல் தோன்றுமால் என்கின்றாளால் ⋆
மின்னு மா மணி மகர குண்டலங்கள் ⋆
வில் வீசும் என்கின்றாளால் ⋆
பொன்னின் மா மணி ஆரம் ⋆
அணி ஆகத்திலங்குமால் என்கின்றாளால் ⋆
கன்னி மா மதிள் புடை சூழ் ⋆
கண்ணபுரத்தம்மானைக் கண்டாள் கொலோ ‖ **8.1.3** ‖

தார் ஆய தண் துளப ⋆
வண்டுழுத வரை மார்பன் என்கின்றாளால் ⋆
போர் ஆனைக் கொம்பொசித்த ⋆
புட்பாகன் என் அம்மான் என்கின்றாளால் ⋆
ஆரானும் காண்மின்கள் ⋆
அம் பவளம் வாய் அவனுக்கென்கின்றாளால் ⋆

கார்வானம் நின்ற திரும் ⋆
கண்ணபுரத்தம்மானைக் கண்டாள் கொலோ ‖ **8.1.4** ‖

அடித்தலமும் தாமரையே ⋆
அங்கைகளும் பங்கயமே என்கின்றாளால் ⋆
முடித்தலமும் பொற்பூணும் ⋆
என் நெஞ்சத்துள் அகலா என்கின்றாளால் ⋆
வடித்தடங்கண் மலரவளோ ⋆
வரை ஆகத்துள்ளிருப்பாள் என்கின்றாளால் ⋆
கடிக்கமலம் கள் உகுக்கும் ⋆
கண்ணபுரத்தம்மானைக் கண்டாள் கொலோ ‖ **8.1.5** ‖

பேர் ஆயிரம் உடைய பேராளன் ⋆
பேராளன் என்கின்றாளால் ⋆
ஏர் ஆர் கன மகர குண்டலத்தன் ⋆
எண் தோளன் என்கின்றாளால் ⋆
நீர் ஆர் மழை முகிலே ⋆
நீள் வரையே ஒக்குமால் என்கின்றாளால் ⋆
கார் ஆர் வயல் அமரும் ⋆
கண்ணபுரத்தம்மானைக் கண்டாள் கொலோ ‖ **8.1.6** ‖

செவ் அரத்த உடை ஆடை ⋆
அதன் மேல் ஓர் சிவளிகைக் கச்சென்கின்றாளால் ⋆
அவ் அரத்த அடி இணையும் ⋆
அங்கைகளும் பங்கயமே என்கின்றாளால் ⋆
மை வளர்க்கும் மணி உருவம் ⋆
மரகதமோ மழை முகிலோ ! என்கின்றாளால் ⋆

கை வளர்க்கும் அழலாளர் ⋆
கண்ணபுரத்தம்மானைக் கண்டாள் கொலோ ‖ **8.1.7** ‖

கொற்றப் புள் ஒன்றேறி மன்றூடே ⋆
வருகின்றான் என்கின்றாளால் ⋆
வெற்றிப் போர் இந்திரற்கும் ⋆
இந்திரனே ஒக்குமால் என்கின்றாளால் ⋆
பெற்றக்கால் அவனாகம் ⋆
பெண் பிறந்தோம் உய்யோமோ என்கின்றாளால் ⋆
கற்ற நூல் மறையாளர் ⋆
கண்ணபுரத்தம்மானைக் கண்டாள் கொலோ ‖ **8.1.8** ‖

வண்டமரும் வனமாலை ⋆
மணி முடி மேல் மண நாறும் என்கின்றாளால் ⋆
உண்டிவர் பால் அன்பெனக்கென்று ⋆
ஒருகாலும் பிரிகிலேன் என்கின்றாளால் ⋆
பண்டிவரைக் கண்டறிவது எவ்வூரில் ⋆
யாம் என்றே பயில்கின்றாளால் ⋆
கண்டவர் தம் மனம் வழங்கும் ⋆
கண்ணபுரத்தம்மானைக் கண்டாள் கொலோ ‖ **8.1.9** ‖

‡ மா வளரும் மென் நோக்கி ⋆
மாதராள் மாயவனைக் கண்டாள் என்று ⋆
கா வளரும் கடி பொழில் சூழ் ⋆
கண்ணபுரத்தம்மானைக் கலியன் சொன்ன ⋆
பா வளரும் தமிழ் மாலை ⋆
பன்னிய நூல் இவை ஐந்தும் ஐந்தும் வல்லார் ⋆

பூ வளரும் கற்பகம் சேர் ⋆
பொன் உலகில் மன்னவர் ஆய்ப் புகழ் தக்கோரே ॥ **8.1.10** ॥

## பெரிய திருமொழி – தெள்ளியீர்

‡ தெள்ளியீர் ! ⋆
தேவர்க்கும் தேவர் திருத் தக்கீர் ! ⋆
வெள்ளியீர் ⋆
வெய்ய விழு நிதி வண்ணர் ⋆
ஓ ! துள்ளு நீர்க் ⋆
கண்ணபுரம் தொழுதாள் இவள் கள்வியோ ⋆
கைவளை கொள்வது தக்கதே ॥ **8.2.1** ॥

நீணிலா முற்றத்து ⋆
நின்றிவள் நோக்கினாள் ⋆
காணுமோ ! ⋆
கண்ணபுரம் என்று காட்டினாள் ⋆
பாணனார் திண்ணம் இருக்க ⋆
இனி இவள் நாணுமோ ⋆
நன்று நன்று நறையூரர்க்கே ॥ **8.2.2** ॥

‡ அருவி சோர் வேங்கடம் ⋆
நீர் மலை என்று வாய் வெருவினாள் ⋆
மெய்யம் வினவி இருக்கின்றாள் ⋆
பெருகு சீர்க் ⋆
கண்ணபுரம் என்று பேசினாள் உருகினாள் ⋆
உள் மெலிந்தாள் ⋆
இது என் கொலோ ॥ **8.2.3** ॥

உண்ணும் நாள் இல்லை ⋆
உறக்கமும் தான் இல்லை ⋆
பெண்மையும் சால ⋆
நிறைந்திலள் பேதை தான் ⋆
கண்ணனூர் கண்ணபுரம் தொழும் ⋆
கார்க் கடல் வண்ணர் மேல் ⋆
எண்ணம் இவட்கு ⋆
இது என் கொலோ ‖ **8.2.4** ‖

கண்ணனூர் ⋆
கண்ணபுரம் தொழும் காரிகை ⋆
பெண்மையும் தன்னுடை ⋆
உண்மை உரைக்கின்றாள் ⋆
வெண்ணெ உண்டாப்புண்ட ⋆
வண்ணம் விளம்பினாள் ⋆
வண்ணமும் ⋆
பொன் நிறம் ஆவதொழியுமே ‖ **8.2.5** ‖

வட வரை நின்றும் வந்து ⋆
இன்று கணபுரம் ⋆
இடவகை கொள்வது ⋆
யாம் என்று பேசினாள் ⋆
மடவரல் மாதர் என் பேதை ⋆
இவர்க்கிவள் கடவதென் ⋆
கண் துயில் ⋆
இன்றிவர் கொள்ளவே ‖ **8.2.6** ‖

தரங்க நீர் பேசினும் ⋆
தண் மதி காயினும் ⋆
இரங்குமோ ⋆
எத்தனை நாள் இருந்தெள்கினாள் ⋆
துரங்கம் வாய் கீண்டுகந்தான் அது ⋆
தொன்மை ஊர் ⋆
அரங்கமே என்பது ⋆
இவள் தனக்காசையே ॥ **8.2.7** ॥

தொண்டெல்லாம் நின் அடியே ⋆
தொழுதுய்யுமா கண்டு ⋆
தான் கணபுரம் ⋆
தொழப் போயினாள் ⋆
வண்டுலாம் கோதை என் பேதை ⋆
மணி நிறம் கொண்டு தான் ⋆
கோ இன்மை செய்வது தக்கதே ॥ **8.2.8** ॥

முள் எயிறேய்ந்தில ⋆
கூழை முடி கொடா ⋆
தெள்ளியள் என்பதோர் ⋆
தேசிலள் என் செய்கேன் ⋆
கள் அவிழ் சோலைக் ⋆
கணபுரம் கை தொழும் பிள்ளையை ⋆
பிள்ளை என்றெண்ணப் பெறுவரே ॥ **8.2.9** ॥

‡ கார்மலி ⋆
கண்ணபுரத்தெம் அடிகளை ⋆
பார் மலி மங்கையர் கோன் ⋆

பரகாலன் சொல் ⋆
சீர் மலி பாடல் ⋆
இவை பத்தும் வல்லவர் ⋆
நீர் மலி வையத்து ⋆
நீடு நிற்பார்களே ‖ **8.2.10** ‖

## பெரிய திருமொழி – கரையெடுத்த

‡ கரை எடுத்த சுரி சங்கும் ⋆
கன பவளத்தெழு கொடியும் ⋆
திரை எடுத்து வரு புனல் சூழ் ⋆
திருக் கண்ணபுரத்துறையும் ⋆
விரை எடுத்த துழாய் அலங்கல் ⋆
விறல் வரைத் தோள் புடை பெயர ⋆
வரை எடுத்த பெருமானுக்கு ⋆
இழந்தேன் என் வரி வளையே ‖ **8.3.1** ‖

அரிவிரவு முகிற் கணத்தால் ⋆
அகிற் புகையால் வரையோடும் ⋆
தெரிவரிய மணி மாடத் ⋆
திருக் கண்ணபுரத்துறையும் ⋆
வரி அரவின் அணைத் துயின்று ⋆
மழை மதத்த சிறு தறு கண் ⋆
கரி வெருவ மருப்பொசித்தாற்கு ⋆
இழந்தேன் என் கன வளையே ‖ **8.3.2** ‖

துங்க மா மணி மாட ⋆
நெடு முகட்டின் சூலிகை போம் ⋆
திங்கள் மா முகில் துணிக்கும் ⋆

திருக் கண்ணபுரத்துறையும் ⋆
பைங்கண் மால் விடை அடர்த்துப் ⋆
பனி மதி கோள் விடுத்துகந்த ⋆
செங்கண் மால் அம்மானுக்கு ⋆
இழந்தேன் என் செறி வளையே ॥ **8.3.3** ॥

கண மருவு மயில் அகவு ⋆
கடி பொழில் சூழ் நெடு மறுகில் ⋆
திண மருவு கன மதிள் சூழ் ⋆
திருக் கண்ணபுரத்துறையும் ⋆
மண மருவு தோள் ஆய்ச்சி ⋆
ஆர்க்கப் போய் உரலோடும் ⋆
புணர் மருதம் இற நடந்தாற்கு ⋆
இழந்தேன் என் பொன் வளையே ॥ **8.3.4** ॥

வாய் எடுத்த மந்திரத்தால் ⋆
அந்தணர் தம் செய் தொழில்கள் ⋆
தீ எடுத்து மறை வளர்க்கும் ⋆
திருக் கண்ணபுரத்துறையும் ⋆
தாய் எடுத்த சிறு கோலுக்கு ⋆
உளைந்தோடித் தயிர் உண்ட ⋆
வாய் துடைத்த மைந்தனுக்கு ⋆
இழந்தேன் என் வரி வளையே ॥ **8.3.5** ॥

மடல் எடுத்த நெடுந்தாழை ⋆
மருங்கெல்லாம் வளர் பவளம் ⋆
திடல் எடுத்துச் சுடர் இமைக்கும் ⋆
திருக் கண்ணபுரத்துறையும் ⋆

அடல் அடர்த்தன்றிரணியனை ⋆
முரண் அழிய அணி உகிரால் ⋆
உடல் எடுத்த பெருமானுக்கு ⋆
இழந்தேன் என் ஒளி வளையே ॥ **8.3.6** ॥

வண்டமரும் மலர்ப் புன்னை ⋆
வரி நீழல் அணி முத்தம் ⋆
தெண் திரைகள் வரத் திரட்டும் ⋆
திருக் கண்ணபுரத்துறையும் ⋆
எண் திசையும் எழு சுடரும் ⋆
இரு நிலனும் பெரு விசும்பும் ⋆
உண்டுமிழ்ந்த பெருமானுக்கு ⋆
இழந்தேன் என் ஒளி வளையே ॥ **8.3.7** ॥

கொங்கு மலி கருங்குவளை ⋆
கண்ணாகத் தெண் கயங்கள் ⋆
செங்கமல முகம் அலர்த்தும் ⋆
திருக் கண்ணபுரத்துறையும் ⋆
வங்க மலி தடங்கடலுள் ⋆
வரி அரவின் அணைத்துயின்ற ⋆
செங்கமல நாபனுக்கு ⋆
இழந்தேன் என் செறி வளையே ॥ **8.3.8** ॥

வார் ஆளும் இளங்கொங்கை ⋆
நெடும் பணைத் தோள் மடப் பாவை ⋆
சீர் ஆளும் வரை மார்பன் ⋆
திருக் கண்ணபுரத்துறையும் ⋆
பேராளன் ஆயிரம் பேர் ⋆

ஆயிர வாய் அரவணை மேல் ⋆
பேராளர் பெருமானுக்கு ⋆
இழந்தேன் என் பெய் வளையே ॥ **8.3.9** ॥

‡ தே மருவு பொழில் புடை சூழ் ⋆
திருக் கண்ணபுரத்துறையும் வாமனனை ⋆
மறி கடல் சூழ் ⋆
வயல் ஆலி வள நாடன் ⋆
காமரு சீர்க் கலிகன்றி ⋆
கண்டுரைத்த தமிழ் மாலை ⋆
நா மருவி இவை பாட ⋆
வினையாய நண்ணாவே ॥ **8.3.10** ॥

## பெரிய திருமொழி – விண்ணவர் தங்கள்

‡ விண்ணவர் தங்கள் பெருமான் ⋆
திருமார்வன் ⋆
மண்ணவர் எல்லாம் வணங்கும் ⋆
மலி புகழ் சேர் ⋆
கண்ணபுரத்தெம் பெருமான் ⋆
கதிர் முடி மேல் ⋆
வண்ண நறுந்துழாய் ⋆
வந்தூதாய் கோல் தும்பீ ! ॥ **8.4.1** ॥

வேத முதல்வன் ⋆
விளங்கு புரி நூலன் ⋆
பாதம் பரவிப் ⋆
பலரும் பணிந்தேத்தி ⋆
காதன்மை செய்யும் ⋆

கண்ணபுரத்தெம் பெருமான் ⋆
தாது நறுந்துழாய் ⋆
தாழ்ந்தூதாய் கோல் தும்பீ ! ॥ **8.4.2** ॥

விண்ட மலர் எல்லாம் ⋆
ஊதி நீ என் பெறுதி ⋆
அண்ட முதல்வன் ⋆
அமரர்கள் எல்லாரும் ⋆
கண்டு வணங்கும் ⋆
கண்ணபுரத்தெம் பெருமான் ⋆
வண்டு நறுந்துழாய் ⋆
வந்தூதாய் கோல் தும்பீ ! ॥ **8.4.3** ॥

நீர் மலிகின்றதோர் ⋆
மீன் ஆய் ஓர் ஆமையும் ஆய் ⋆
சீர் மலிகின்றதோர் ⋆
சிங்க உருவாகி ⋆
கார் மலி வண்ணன் ⋆
கண்ணபுரத்தெம் பெருமான் ⋆
தார் மலி தண் துழாய் ⋆
தாழ்ந்தூதாய் கோல் தும்பீ ! ॥ **8.4.4** ॥

ஏர் ஆர் மலர் எல்லாம் ⋆
ஊதி நீ என் பெறுதி ⋆
பார் ஆர் உலகம் ⋆
பரவப் பெருங்கடலுள் ⋆
கார் ஆமை ஆன ⋆
கண்ணபுரத்தெம் பெருமான் ⋆

தார் ஆர் நறுந்துழாய் ⋆
தாழ்ந்தூதாய் கோல் தும்பீ ! ॥ **8.4.5** ॥

மார்வில் திருவன் ⋆
வலன் ஏந்து சக்கரத்தன் ⋆
பாரைப் பிளந்த ⋆
பரமன் பரஞ்சோதி ⋆
காரில் திகழ் ⋆
காயா வண்ணன் கதிர் முடி மேல் ⋆
தாரில் நறுந்துழாய் ⋆
தாழ்ந்தூதாய் கோல் தும்பீ ! ॥ **8.4.6** ॥

வாமனன் கற்கி ⋆
மதுசூதன் மாதவன் ⋆
தார் மன்னு ⋆
தாசரதி ஆய தட மார்வன் ⋆
காமன் தன் தாதை ⋆
கண்ணபுரத்தெம் பெருமான் ⋆
தாம நறுந்துழாய் ⋆
தாழ்ந்தூதாய் கோல் தும்பீ ! ॥ **8.4.7** ॥

நீல மலர்கள் ⋆
நெடு நீர் வயல் மருங்கில் ⋆
சால மலர் எல்லாம் ⋆
ஊதாதே ⋆
வாள் அரக்கர் காலன் ⋆
கண்ணபுரத்தெம் பெருமான் கதிர் முடி மேல் ⋆

கோல நறுந்துழாய் ⋆
கொண்டூதாய் கோல் தும்பீ ! ‖ **8.4.8** ‖

நந்தன் மதலை ⋆
நில மங்கை நல் துணைவன் ⋆
அந்த முதல்வன் ⋆
அமரர்கள் தம் பெருமான் ⋆
கந்தம் கமழ் ⋆
காயா வண்ணன் கதிர் முடி மேல் ⋆
கொந்து நறுந்துழாய் ⋆
கொண்டூதாய் கோல் தும்பீ ! ‖ **8.4.9** ‖

‡ வண்டமரும் சோலை ⋆
வயல் ஆலி நல் நாடன் ⋆
கண்ட சீர் வென்றிக் ⋆
கலியன் ஒலி மாலை ⋆
கொண்டல் நிற வண்ணன் ⋆
கண்ணபுரத்தானை ⋆
தொண்டரோம் பாட ⋆
நினைந்தூதாய் கோல் தும்பீ ! ‖ **8.4.10** ‖

## பெரிய திருமொழி – தந்தை காலில்

‡ தந்தை காலில் விலங்கற ⋆
வந்து தோன்றிய தோன்றல் பின் ⋆
தமியேன் தன் சிந்தை போயிற்றுத் ⋆
திருவருள் அவனிடைப் பெறும் அளவிருந்தேனை ⋆
அந்தி காவலன் அமுதுறு பசுங்கதிர் அவை சுட ⋆
அதனோடும் ⋆

மந்த மாருதம் வன முலை தடவந்து ⋆
வலி செய்வதொழியாதே ! ॥ **8.5.1** ॥

மாரி மாக் கடல் வளைவணற்கிளையவன் ⋆
வரை புரை திருமார்பில் ⋆
தாரின் ஆசையில் போயின நெஞ்சமும் ⋆
தாழ்ந்ததோர் துணை காணேன் ⋆
ஊரும் துஞ்சிற்றுலகமும் துயின்றது ⋆
ஒளியவன் விசும்பியங்கும் ⋆
தேரும் போயிற்றுத் திசைகளும் மறைந்தன ⋆
செய்வதொன்றறியேனே ! ॥ **8.5.2** ॥

ஆயன் மாயமே அன்றி மற்றென் கையில் ⋆
வளைகளும் இறை நில்லா ⋆
பேயின் ஆர் உயிர் உண்டிடும் பிள்ளை ⋆
நம் பெண் உயிர்க்கிரங்குமோ ⋆
தூய மா மதிக் கதிர் சுடத் துணை இல்லை ⋆
இணை முலை வேகின்றதால் ⋆
ஆயன் வேயினுக்கழிகின்றதுள்ளமும் ⋆
அஞ்சேல் என்பார் இலையே ! ॥ **8.5.3** ॥

கயம் கொள் புண் தலைக் களிறுந்து வெந்திறல் ⋆
கழல் மன்னர் பெரும் போரில் ⋆
மயங்க வெண் சங்கம் வாய் வைத்த மைந்தனும் ⋆
வந்திலன் மறி கடல் நீர் ⋆
தயங்கு வெண் திரைத் திவலை நுண் பனி எனும் ⋆
தழல் முகந்திள முலை மேல் ⋆

இயங்கு மாருதம் விலங்கில் என் ஆவியை ⋆
எனக்கெனப் பெறலாமே ! ‖ **8.5.4** ‖

ஏழு மா மரம் துளை படச் சிலை வளைத்து ⋆
இலங்கையை மலங்குவித்த ஆழியான் ⋆
நமக்கருளிய அருளொடும் ⋆
பகல் எல்லை கழிகின்றதால் ⋆
தோழி ! நாம் இதற்கென் செய்தும் ⋆
துணை இல்லை சுடர் படு முது நீரில் ⋆
ஆழ ஆழ்கின்ற ஆவியை ⋆
அடுவதோர் அந்தி வந்தடைகின்றதே ! ‖ **8.5.5** ‖

முரியும் வெண் திரை முது கயம் தீப்பட ⋆
முழங்கழல் எரி அம்பின் ⋆
வரி கொள் வெஞ்சிலை வளைவித்த ⋆
மைந்தனும் வந்திலன் என் செய்கேன் ⋆
எரியும் வெங்கதிர் துயின்றது ⋆
பாவியேன் இணை நெடுங்கண் துயிலா ⋆
கரிய நாழிகை ஊழியின் பெரியன ⋆
கழியும் ஆறறியேனே ! ‖ **8.5.6** ‖

கலங்க மாக்கடல் கடைந்தடைத்து ⋆
இலங்கையர் கோனது வரை ஆகம் மலங்க ⋆
வெஞ்சமத்தடு சரம் துரந்த ⋆
எம் அடிகளும் வாரானால் ⋆
இலங்கு வெங்கதிர் இள மதி அதனொடும் ⋆
விடை மணி அடும் ⋆

ஆயன் விலங்கல் வேயினதோசையும் ஆய் ⋆
இனி விளைவதொன்றறியேனே ! ‖ **8.5.7** ‖

முழுதிவ்வையகம் முறை கெட மறைதலும் ⋆
முனிவனும் முனிவெய்தி ⋆
மழுவினால் மன்னர் ஆர் உயிர் வவ்விய ⋆
மைந்தனும் வாரானால் ⋆
ஒழுகு நுண் பனிக்கொடுங்கிய பேடையை ⋆
அடங்க அஞ்சிறை கோலித் ⋆
தழுவு நள் இருள் தனிமையின் கடியதோர் ⋆
கொடு வினை அறியேனே ! ‖ **8.5.8** ‖

கனஞ்செய் மா மதிள் கணபுரத்தவனொடும் ⋆
கனவினில் அவன் தந்த ⋆
மனஞ்செய் இன்பம் வந்துள் புக வெள்கி ⋆
என் வளை நெக இருந்தேனை ⋆
சினஞ்செய் மால் விடைச் சிறு மணி ஓசை ⋆
என் சிந்தையைச் சிந்துவிக்கும் ⋆
அனந்தல் அன்றிலின் அரி குரல் ⋆
பாவியேன் ஆவியை அடுகின்றதே ! ‖ **8.5.9** ‖

‡ வார் கொள் மென் முலை மடந்தையர் ⋆
தடங்கடல் வண்ணனைத் தாள் நயந்து ⋆
ஆர்வத்தால் அவர் புலம்பிய புலம்பலை ⋆
அறிந்து முன் உரை செய்த ⋆
கார் கொள் பைம் பொழில் மங்கையர் காவலன் ⋆
கலிகன்றி ஒலி வல்லார் ⋆

ஏர் கொள் வைகுந்த மாநகர் புக்கு ⋆
இமையவரொடும் கூடுவரே ॥ **8.5.10** ॥

## பெரிய திருமொழி – தொண்டீர்

‡ தொண்டீர் ! உய்யும் வகை கண்டேன் ⋆
துளங்கா அரக்கர் துளங்க ⋆
முன் திண் தோள் நிமிரச் சிலை வளையச் ⋆
சிறிதே முனிந்த திருமார்பன் ⋆
வண்டார் கூந்தல் மலர் மங்கை ⋆
வடிக் கண் மடந்தை மான் நோக்கம் கண்டான் ⋆
கண்டு கொண்டுகந்த ⋆
கண்ணபுரம் நாம் தொழுதுமே ॥ **8.6.1** ॥

பொருந்தா அரக்கர் வெஞ்சமத்துப் ⋆
பொன்ற அன்று புள் ஊர்ந்து ⋆
பெருந்தோள் மாலி தலை புரளப் ⋆
பேர்ந்த அரக்கர் தென் இலங்கை ⋆
இருந்தார் தம்மை உடன் கொண்டு ⋆
அங்கெழில் ஆர் பிலத்துப் புக்கொளிப்ப ⋆
கருந்தாள் சிலைகைக் கொண்டான் ஊர் ⋆
கண்ணபுரம் நாம் தொழுதுமே ॥ **8.6.2** ॥

வல்லி இடையாள் பொருட்டாக ⋆
மதிள் நீர் இலங்கையார் கோவை ⋆
அல்லல் செய்து வெஞ்சமத்துள் ⋆
ஆற்றல் மிகுத்த ஆற்றலான் ⋆
வல் ஆள் அரக்கர் குலப்பாவை வாட ⋆
முனி தன் வேள்வியைக் ⋆

கல்விச் சிலையால் காத்தான் ஊர் ⋆
கண்ணபுரம் நாம் தொழுதுமே ॥ **8.6.3** ॥

மல்லை முந்நீர் அதர் பட ⋆
வரி வெஞ்சிலை கால் வளைவித்து ⋆
கொல்லை விலங்கு பணி செய்யக் ⋆
கொடியோன் இலங்கை புகல் உற்று ⋆
தொல்லை மரங்கள் புகப் பெய்து ⋆
துவலை நிமிர்ந்து வான் அணவ ⋆
கல்லால் கடலை அடைத்தான் ஊர் ⋆
கண்ணபுரம் நாம் தொழுதுமே ॥ **8.6.4** ॥

ஆமை ஆகி அரி ஆகி ⋆
அன்னம் ஆகி ⋆
அந்தணர் தம் ஓமம் ஆகி ஊழி ஆகி ⋆
உலகு சூழ்ந்த நெடும் புணரி ⋆
சேம மதிள் சூழ் இலங்கைக்கோன் ⋆
சிரமும் கரமும் துணித்து ⋆
முன் காமற் பயந்தான் கருதும் ஊர் ⋆
கண்ணபுரம் நாம் தொழுதுமே ॥ **8.6.5** ॥

வருந்தாதிரு நீ மட நெஞ்சே ⋆
நம் மேல் வினைகள் வாரா ⋆
முன் திருந்தா அரக்கர் தென் இலங்கை ⋆
செந்தீ உண்ணச் சிவந்தொருநாள் ⋆
பெருந்தோள் வாணற்கருள் புரிந்து ⋆
பின்னை மணாளன் ஆகி ⋆

முன் கருந்தாள் களிறொன்றொசித்தான் ஊர் ⋆
கண்ணபுரம் நாம் தொழுதுமே ॥ **8.6.6** ॥

இலை ஆர் மலர்ப் பூம் பொய்கை வாய் ⋆
முதலை தன்னால் அடர்ப்புண்டு ⋆
கொலை ஆர் வேழம் நடுக்குற்றுக் குலைய ⋆
அதனுக்கருள் புரிந்தான் ⋆
அலை நீர் இலங்கைத் தசக்கிரீவற்கு ⋆
இளையோற்கரசை அருளி ⋆
முன் கலைமாச் சிலையால் எய்தான் ஊர் ⋆
கண்ணபுரம் நாம் தொழுதுமே ॥ **8.6.7** ॥

மால் ஆய் மனமே ! அருந்துயரில் ⋆
வருந்தாதிரு நீ ⋆
வலி மிக்க கால் ஆர் மருதும் காய் சினத்த கழுதும் ⋆
கதமாக் கழுதையும் ⋆
மால் ஆர் விடையும் மத கரியும் ⋆
மல்லர் உயிரும் மடிவித்து ⋆
காலால் சகடம் பாய்ந்தான் ஊர் ⋆
கண்ணபுரம் நாம் தொழுதுமே ॥ **8.6.8** ॥

குன்றால் மாரி பழுதாக்கிக் ⋆
கொடி ஏர் இடையாள் பொருட்டாக ⋆
வன்தாள் விடை ஏழ் அன்றடர்த்த ⋆
வானோர் பெருமான் மா மாயன் ⋆
சென்றான் தூது பஞ்சவர்க்காய் ⋆
திரி காற் சகடம் சினம் அழித்து ⋆

கன்றால் விளங்காய் எறிந்தான் ஊர் ⋆
கண்ணபுரம் நாம் தொழுதுமே ॥ **8.6.9** ॥

‡ கருமா முகில் தோய் நெடு மாடக் ⋆
கண்ணபுரத்தெம் அடிகளை ⋆
திருமா மகளால் அருள்மாரி ⋆
செழு நீர் ஆலி வள நாடன் ⋆
மருவார் புயற் கைக் கலிகன்றி ⋆
மங்கை வேந்தன் ஒலி வல்லார் ⋆
இருமா நிலத்துக்கரசாகி ⋆
இமையோர் இறைஞ்ச வாழ்வாரே ॥ **8.6.10** ॥

## பெரிய திருமொழி – வியமுடை

‡ வியம் உடை விடை இனம் ⋆
உடை தர மட மகள் ⋆
குயமிடை தட வரை ⋆
அகலம் அதுடையவர் ⋆
நயம் உடை நடையனம் ⋆
இளையவர் நடை பயில் ⋆
கயமிடை கணபுரம் ⋆
அடிகள் தம் இடமே ॥ **8.7.1** ॥

இணை மலி மருதினொடு ⋆
எருதிற இகல் செய்து ⋆
துணை மலி முலை அவள் ⋆
மணமிகு கலவியுள் ⋆
மண மலி விழவினொடு ⋆
அடியவர் அளவிய ⋆

கண மலி கணபுரம் ⋆
அடிகள் தம் இடமே ॥ **8.7.2** ॥

புயல் உறு வரை மழை ⋆
பொழி தர மணி நிரை ⋆
மயல் உற வரை குடை ⋆
எடுவிய நெடியவர் ⋆
முயல் துளர் மிளை முயல் துள ⋆
வள விளை வயல் ⋆
கயல் துளு கணபுரம் ⋆
அடிகள் தம் இடமே ॥ **8.7.3** ॥

ஏதலர் நகை செய ⋆
இளையவர் அளை வெணெய் ⋆
போது செய்தமரிய ⋆
புனிதர் நல் விரை மலர் ⋆
கோதிய மதுகரம் ⋆
குலவிய மலர் மகள் ⋆
காதல் செய் கணபுரம் ⋆
அடிகள் தம் இடமே ॥ **8.7.4** ॥

தொண்டரும் அமரரும் ⋆
முனிவரும் தொழுதெழ ⋆
அண்டமொடகல் இடம் ⋆
அளந்தவர் அமர் செய்து ⋆
விண்டவர் பட ⋆
மதிள் இலங்கை முன் எரி எழ ⋆

கண்டவர் கணபுரம் ⋆
அடிகள் தம் இடமே ॥ **8.7.5** ॥

மழுவியல் படை உடை ⋆
அவனிடம் மழை முகில் ⋆
தழுவிய உருவினர் ⋆
திருமகள் மருவிய ⋆
கொழுவிய செழு மலர் ⋆
முழுசிய பறவை பண் ⋆
எழுவிய கணபுரம் ⋆
அடிகள் தம் இடமே ॥ **8.7.6** ॥

பரிதியொடணி மதி ⋆
பனி வரை திசை நிலம் ⋆
எரிதியொடென இன ⋆
இயல்வினர் செலவினர் ⋆
சுருதியொடரு மறை ⋆
முறை சொலும் அடியவர் ⋆
கருதிய கணபுரம் ⋆
அடிகள் தம் இடமே ॥ **8.7.7** ॥

படி புல்கும் அடி இணை ⋆
பலர் தொழ மலர் வைகு ⋆
கொடி புல்கு தடவரை ⋆
அகலம் அதுடையவர் ⋆
முடி புல்கு நெடு வயல் ⋆
படை செல அடி மலர் ⋆

கடி புல்கு கணபுரம் ⋆
அடிகள் தம் இடமே ॥ **8.7.8** ॥

புலமனு மலர் மிசை ⋆
மலர் மகள் புணரிய ⋆
நில மகள் என இன ⋆
மகளிர்கள் இவரொடும் ⋆
வலமனு படை உடை ⋆
மணி வணர் நிதி குவைக் ⋆
கலமனு கணபுரம் ⋆
அடிகள் தம் இடமே ॥ **8.7.9** ॥

‡ மலி புகழ் கணபுரம் உடைய ⋆
எம் அடிகளை ⋆
வலி கெழு மதிள் அயல் ⋆
வயல் அணி மங்கையர் ⋆
கலியன தமிழ் இவை ⋆
விழுமிய விசையினொடு ⋆
ஒலி சொலும் அடியவர் ⋆
உறு துயர் இலரே ॥ **8.7.10** ॥

## பெரிய திருமொழி – வானோர் அளவும்

‡ வானோர் அளவும் முது முந்நீர் ⋆
வளர்ந்த காலம் ⋆
வலி உருவின் மீனாய் வந்து வியந்துய்யக் கொண்ட ⋆
தண் தாமரைக் கண்ணன் ⋆
ஆனா உருவில் ஆன் ஆயன் ⋆
அவனை அம்மா விளை வயலுள் ⋆

கான் ஆர் புறவிற் கண்ணபுரத்து ⋆
அடியேன் கண்டு கொண்டேனே ॥ **8.8.1** ॥

மலங்கு விலங்கு நெடு வெள்ளம் மறுக ⋆
அங்கோர் வரை நட்டு ⋆
இலங்கு சோதியார் அமுதம் ⋆
எய்தும் அளவோர் ஆமை ஆய் ⋆
விலங்கல் திரியத் தடங்கடலுள் ⋆
சுமந்து கிடந்த வித்தகனை ⋆
கலங்கல் முந்நீர்க் கண்ணபுரத்து ⋆
அடியேன் கண்டு கொண்டேனே ॥ **8.8.2** ॥

பார் ஆர் அளவும் முது முந்நீர் ⋆
பரந்த காலம் ⋆
வளை மருப்பில் ஏர் ஆர் உருவத்தேனம் ஆய் ⋆
எடுத்த ஆற்றல் அம்மானை ⋆
கூர் ஆர் ஆரல் இரை கருதிக் ⋆
குருகு பாயக் கயல் இரியும் ⋆
கார் ஆர் புறவிற் கண்ணபுரத்து ⋆
அடியேன் கண்டு கொண்டேனே ॥ **8.8.3** ॥

உளைந்த அரியும் மானிடமும் ⋆
உடனாய்த் தோன்ற ஒன்றுவித்து ⋆
விளைந்த சீற்றம் விண் வெதும்ப ⋆
வேற்றோன் அகலம் வெஞ்சமத்து ⋆
பிளந்து வளைந்த உகிரானைப் ⋆
பெருந்தண் செந்நெல் குலை தடிந்து ⋆

களஞ்செய் புறவிற் கண்ணபுரத்து ⋆
அடியேன் கண்டு கொண்டேனே ॥ **8.8.4** ॥

தொழுநீர் வடிவின் குறள் உருவாய் ⋆
வந்து தோன்றி மாவலி பால் ⋆
முழுநீர் வையம் முன் கொண்ட ⋆
மூவா உருவின் அம்மானை ⋆
உழுநீர் வயலுள் பொன் கிளைப்ப ⋆
ஒரு பால் முல்லை முகையோடும் ⋆
கழுநீர் மலரும் கண்ணபுரத்து ⋆
அடியேன் கண்டு கொண்டேனே ॥ **8.8.5** ॥

வடிவாய் மழுவே படை ஆக ⋆
வந்து தோன்றி மூ எழுகால் ⋆
படி ஆர் அரசு களை கட்ட ⋆
பாழியானை அம்மானை ⋆
குடியா வண்டு கொண்டுண்ணக் ⋆
கோல நீலம் மட்டுகுக்கும் ⋆
கடி ஆர் புறவிற் கண்ணபுரத்து ⋆
அடியேன் கண்டு கொண்டேனே ॥ **8.8.6** ॥

வையம் எல்லாம் உடன் வணங்க ⋆
வணங்கா மன்னனாய்த் தோன்றி ⋆
வெய்ய சீற்றக் கடி இலங்கை ⋆
குடி கொண்டோட வெஞ்சமத்து ⋆
செய்த வெம்போர் நம்பரனைச் ⋆
செழுந்தண் கானல் மண நாறும் ⋆

கைதை வேலிக் கண்ணபுரத்து ⋆
அடியேன் கண்டு கொண்டேனே ‖ **8.8.7** ‖

ஒற்றைக் குழையும் நாஞ்சிலும் ⋆
ஒரு பால் தோன்றத் தான் தோன்றி ⋆
வெற்றித் தொழிலார் வேல் வேந்தர் ⋆
விண் பால் செல்ல வெஞ்சமத்து ⋆
செற்ற கொற்றத் தொழிலானைச் ⋆
செந்தீ மூன்றும் இல் இருப்ப ⋆
கற்ற மறையோர் கண்ணபுரத்து ⋆
அடியேன் கண்டு கொண்டேனே ‖ **8.8.8** ‖

துவரிக் கனிவாய் நில மங்கை ⋆
துயர் தீர்ந்துய்யப் பாரதத்துள் ⋆
இவரித்தரசர் தடுமாற ⋆
இருள் நாள் பிறந்த அம்மானை ⋆
உவரி ஓதம் முத்துந்த ⋆
ஒரு பால் ஒரு பால் ஒண் செந்நெல் ⋆
கவரி வீசும் கண்ணபுரத்து ⋆
அடியேன் கண்டு கொண்டேனே ‖ **8.8.9** ‖

‡ மீனோடாமை கேழல் அரி குறள் ஆய் ⋆
முன்னும் இராமன் ஆய்த் தான் ஆய் ⋆
பின்னும் இராமன் ஆய்த் தாமோதரன் ஆய்க் ⋆
கற்கியும் ஆனான் தன்னை ⋆
கண்ணபுரத்தடியன் ⋆
கலியன் ஒலி செய்த ⋆

தேன் ஆர் இன் சொல் தமிழ் மாலை ⋆
செப்பப் பாவம் நில்லாவே ॥ **8.8.10** ॥

## பெரிய திருமொழி – கைம்மானம்

‡ கைம் மான மத யானை ⋆
இடர் தீர்த்த கரு முகிலை ⋆
மைம் மான மணியை ⋆
அணி கொள் மரதகத்தை ⋆
எம்மானை எம்பிரானை ஈசனை ⋆
என் மனத்துள் அம்மானை ⋆
அடியேன் ⋆
அடைந்துய்ந்து போனேனே ॥ **8.9.1** ॥

தரு மான மழை முகிலைப் ⋆
பிரியாது தன் அடைந்தார் ⋆
வரு மானம் தவிர்க்கும் ⋆
மணியை அணி உருவில் ⋆
திருமாலை அம்மானை அமுதத்தைக் ⋆
கடல் கிடந்த பெருமானை ⋆
அடியேன் ⋆
அடைந்துய்ந்து பிழைத்தேனே ॥ **8.9.2** ॥

விடை ஏழ் அன்றடர்த்து ⋆
வெகுண்டு விலங்கல் உறப் ⋆
படையால் ஆழி தட்ட ⋆
பரமன் பரஞ்சோதி ⋆
மடை ஆர் நீலம் மல்கும் வயல் சூழ் ⋆
கண்ணபுரம் ஒன்றுடையானுக்கு ⋆

அடியேன் ⋆
ஒருவர்க்குரியேனோ ‖ **8.9.3** ‖

‡ மிக்கானை ⋆
மறையாய் விரிந்த விளக்கை ⋆
என்னுள் புக்கானைப் ⋆
புகழ் சேர் பொலிகின்ற பொன் மலையை ⋆
தக்கானைக் ⋆
கடிகைத் தடங்குன்றின் மிசை இருந்த ⋆
அக்காரக் கனியை ⋆
அடைந்துய்ந்து போனேனே ‖ **8.9.4** ‖

வந்தாய் என் மனத்தே ⋆
வந்து நீ புகுந்த பின்னை ⋆
எந்தாய் ! போய் அறியாய் ⋆
இதுவே அமையாதோ ⋆
கொந்தார் பைம் பொழில் சூழ் ⋆
குடந்தைக் கிடந்துகந்த மைந்தா ⋆
உன்னை என்றும் ⋆
மறவாமைப் பெற்றேனே ‖ **8.9.5** ‖

எஞ்சா வெந்நரகத்து ⋆
அழுந்தி நடுங்குகின்றேற்கு ⋆
அஞ்சேல் என்றடியேனை ⋆
ஆட்கொள்ள வல்லானை ⋆
நெஞ்சே ! நீ நினையாது ⋆
இறைப் பொழுதும் இருத்தி கண்டாய் ⋆

மஞ்சார் மாளிகை சூழ் ⋆
வயல் ஆலி மைந்தனையே ‖ **8.9.6** ‖

பெற்றார் பெற்றொழிந்தார் ⋆
பின்னும் நின்றடியேனுக்கு ⋆
உற்றானாய் வளர்த்து ⋆
என் உயிர் ஆகி நின்றானை ⋆
முற்றா மாமதி கோள் ⋆
விடுத்தானை எம்மானை ⋆
எத்தால் யான் மறக்கேன் ⋆
இது சொல்லென் ஏழை நெஞ்சே ! ‖ **8.9.7** ‖

கற்றார் பற்றறுக்கும் ⋆
பிறவிப் பெருங்கடலே ⋆
பற்றா வந்தடியேன் ⋆
பிறந்தேன் பிறந்த பின்னை ⋆
வற்றா நீர் வயல் சூழ் ⋆
வயல் ஆலி அம்மானைப் பெற்றேன் ⋆
பெற்றதுவும் ⋆
பிறவாமை பெற்றேனே ‖ **8.9.8** ‖

கண்ணார் கண்ணபுரம் ⋆
கடிகை கடி கமழும் ⋆
தண்ணார் தாமரை சூழ் ⋆
தலைச்சங்க மேல் திசையுள் ⋆
விண்ணோர் நாண்மதியை ⋆
விரிகின்ற வெஞ்சுடரை ⋆

கண்ணாரக் கண்டு கொண்டு ⋆
களிக்கின்றதிங்கென்று கொலோ ‖ **8.9.9** ‖

‡ செரு நீர வேல் வலவன் ⋆
கலிகன்றி மங்கையர் கோன் ⋆
கரு நீர் முகில் வண்ணன் ⋆
கண்ணபுரத்தானை ⋆
இரு நீரின் தமிழ் ⋆
இன் இசை மாலைகள் கொண்டு தொண்டீர் ⋆
வரு நீர் வையம் உய்ய ⋆
இவை பாடி ஆடுமினே ‖ **8.9.10** ‖

## பெரிய திருமொழி – வண்டார்

‡ வண்டார் பூ மா மலர் மங்கை ⋆
மண நோக்கம் உண்டானே ⋆
உன்னை உகந்துகந்து ⋆
உன் தனக்கே தொண்டானேற்கு ⋆
என் செய்கின்றாய் சொல்லு ⋆
நால் வேதம் கண்டானே ⋆
கண்ணபுரத்துறை அம்மானே ! ‖ **8.10.1** ‖

பெரு நீரும் விண்ணும் ⋆
மலையும் உலகேழும் ⋆
ஒரு தாரா நின்னுள் ஒடுக்கிய ⋆
நின்னை அல்லால் ⋆
வரு தேவர் மற்றுளர் என்று ⋆
என் மனத்திறையும் கருதேன் நான் ⋆
கண்ணபுரத்துறை அம்மானே ! ‖ **8.10.2** ‖

‡ மற்றும் ஓர் தெய்வம் உளதென்று ⋆
இருப்பாரோடுற்றிலேன் ⋆
உற்றதும் ⋆
உன் அடியார்க்கடிமை ⋆
மற்றெல்லாம் பேசிலும் ⋆
நின் திரு எட்டெழுத்தும் கற்று நான் ⋆
கண்ணபுரத்துறை அம்மானே ! ‖ **8.10.3** ‖

பெண் ஆனாள் ⋆
பேர் இளங்கொங்கையின் ஆர் அழல் போல் ⋆
உண்ணா நஞ்சுண்டுகந்தாயை ⋆
உகந்தேன் நான் ⋆
மண் ஆளா ! வாள் நெடுங்கண்ணி ⋆
மது மலராள் கண்ணாளா ⋆
கண்ணபுரத்துறை அம்மானே ! ‖ **8.10.4** ‖

பெற்றாரும் சுற்றமும் என்று ⋆
இவை பேணேன் நான் ⋆
மற்றாரும் பற்றிலேன் ⋆
ஆதலால் நின் அடைந்தேன் ⋆
உற்றான் என்றுள்ளத்து வைத்து ⋆
அருள் செய் கண்டாய் ⋆
கற்றார் சேர் ⋆
கண்ணபுரத்துறை அம்மானே ! ‖ **8.10.5** ‖

ஏத்தி உன் சேவடி ⋆
எண்ணி இருப்பாரைப் ⋆
பார்த்திருந்தங்கு ⋆

நமன் தமர் பற்றாது ⋆
சோத்தம் நாம் அஞ்சுதும் என்று ⋆
தொடாமை நீ காத்தி போல் ⋆
கண்ணபுரத்துறை அம்மானே ! || **8.10.6** ||

வெள்ளை நீர் வெள்ளத்து ⋆
அணைந்த அரவணை மேல் ⋆
துள்ளு நீர் மெள்ளத் ⋆
துயின்ற பெருமானே ⋆
வள்ளலே ! உன் தமர்க்கென்றும் ⋆
நமன் தமர் கள்ளர் போல் ⋆
கண்ணபுரத்துறை அம்மானே ! || **8.10.7** ||

மாண் ஆகி ⋆
வையம் அளந்ததுவும் ⋆
வாள் அவுணன் பூண் ஆகம் கீண்டதுவும் ⋆
ஈண்டு நினைந்திருந்தேன் ⋆
பேணாத வல்வினையேன் ⋆
இடர் எத்தனையும் காணேன் நான் ⋆
கண்ணபுரத்துறை அம்மானே ! || **8.10.8** ||

நாட்டினாய் என்னை ⋆
உனக்கு முன் தொண்டாக ⋆
மாட்டினேன் அத்தனையே கொண்டு ⋆
என் வல்வினையை ⋆
பாட்டினால் உன்னை ⋆
என் நெஞ்சத்திருந்தமை காட்டினாய் ⋆
கண்ணபுரத்துறை அம்மானே ! || **8.10.9** ||

‡ கண்ட சீர்க் ⋆
கண்ணபுரத்துறை அம்மானை ⋆
கொண்ட சீர்த் தொண்டன் ⋆
கலியன் ஒலி மாலை ⋆
பண்டம் ஆய்ப் பாடும் ⋆
அடியவர்க்கெஞ்ஞான்றும் ⋆
அண்டம் போய் ஆட்சி ⋆
அவர்க்கதறிந்தோமே ॥ **8.10.10** ॥

## திருமங்கையாழ்வார் அருளிச்செய்த – திருநெடுந்தாண்டகம்

‡ கன்று மேய்த்தினிதுகந்த காளாய் ! என்றும் ⋆
கடி பொழில் சூழ் கணபுரத்தென் கனியே ! என்றும் ⋆
மன்றமரக் கூத்தாடி மகிழ்ந்தாய் ! என்றும் ⋆
வட திருவேங்கடம் மேய மைந்தா ! என்றும் ⋆
வென்றசுரர் குலம் களைந்த வேந்தே ! என்றும் ⋆
விரி பொழில் சூழ் திருநறையூர் நின்றாய் ! என்றும் ⋆
துன்று குழல் கரு நிறத்தென் துணையே என்றும் ⋆
துணை முலை மேல் துளி சோரச் சோர்கின்றாளே ! ॥ **16** ॥

‡ செங்கால மட நாராய் ! இன்றே சென்று ⋆
திருக் கண்ணபுரம் புக்கென் செங்கண் மாலுக்கு ⋆
என் காதல் என் துணைவர்க்குரைத்தி ஆகில் ⋆
இது ஒப்பதெமக்கின்பம் இல்லை ⋆
நாளும் பைங்கானம் ஈதெல்லாம் உனதே ஆகப் ⋆
பழன மீன் கவர்ந்துண்ணத் தருவன் ⋆
தந்தால் இங்கே வந்தினிதிருந்துன் பெடையும் நீயும் ⋆
இரு நிலத்தில் இனிதின்பம் எய்தலாமே ॥ **27** ॥

## திருவாய்மொழி – மாலை நண்ணி

‡ மாலை நண்ணித் ⋆
தொழுதெழுமினோ வினை கெட ⋆
காலை மாலை ⋆
கமல மலர் இட்டு நீர் ⋆
வேலை மோதும் மதிள் சூழ் ⋆
திருக்கண்ண புரத்து ⋆
ஆலின் மேலால் அமர்ந்தான் ⋆
அடி இணைகளே ॥ **9.10.1** ॥

கள் அவிழும் மலர் இட்டு ⋆
நீர் இறைஞ்சுமின் ⋆
நள்ளி சேரும் வயல் சூழ் ⋆
கிடங்கின் புடை ⋆
வெள்ளி ஏய்ந்த மதிள் சூழ் ⋆
திருக்கண்ண புரம் உள்ளி ⋆
நாளும் தொழுதெழுமினோ தொண்டரே ! ॥ **9.10.2** ॥

தொண்டர் ! நுந்தம் ⋆
துயர் போக நீர் ஏகமாய் ⋆
விண்டு வாடா மலர் இட்டு ⋆
நீர் இறைஞ்சுமின் ⋆
வண்டு பாடும் பொழில் சூழ் ⋆
திருக்கண்ண புரத்தண்ட வாணன் ⋆
அமரர் பெருமானையே ॥ **9.10.3** ॥

மானை நோக்கி ⋆
மடப் பின்னை தன் கேள்வனை ⋆

தேனை வாடா மலர் இட்டு ⋆
நீர் இறைஞ்சுமின் ⋆
வானை உந்தும் மதிள் சூழ் ⋆
திருக்கண்ண புரம் ⋆
தான் நயந்த பெருமான் ⋆
சரணாகுமே ‖ **9.10.4** ‖

சரணம் ஆகும் ⋆
தன தாள் அடைந்தார்க்கெல்லாம் ⋆
மரணம் ஆனால் ⋆
வைகுந்தம் கொடுக்கும் பிரான் ⋆
அரண் அமைந்த மதிள் சூழ் ⋆
திருக்கண்ண புரத் தரணி ஆளன் ⋆
தனதன்பர்க்கன்பாகுமே ‖ **9.10.5** ‖

அன்பன் ஆகும் ⋆
தன தாள் அடைந்தார்க்கெல்லாம் ⋆
செம் பொன் ஆகத்து ⋆
அவுணன் உடல் கீண்டவன் ⋆
நன் பொன் ஏய்ந்த மதிள் சூழ் ⋆
திருக்கண்ண புரத்தன்பன் ⋆
நாளும் தன மெய்யர்க்கு மெய்யனே ‖ **9.10.6** ‖

மெய்யன் ஆகும் ⋆
விரும்பித் தொழுவார்க்கெல்லாம் ⋆
பொய்யன் ஆகும் ⋆
புறமே தொழுவார்க்கெல்லாம் ⋆
செய்யில் வாளை உகளும் ⋆

திருக்கண்ண புரத்தையன் ⋆
ஆகத்தணைப்பார்கட்கணியனே ‖ **9.10.7** ‖

அணியன் ஆகும் ⋆
தன தாள் அடைந்தார்க்கெல்லாம் ⋆
பிணியும் சாரா ⋆
பிறவி கெடுத்தாளும் ⋆
மணி பொன் ஏய்ந்த மதிள் சூழ் ⋆
திருக்கண்ண புரம் பணிமின் ⋆
நாளும் பரமேட்டி தன் பாதமே ‖ **9.10.8** ‖

பாதம் நாளும் ⋆
பணியத் தணியும் பிணி ⋆
ஏதம் சாரா ⋆
எனக்கேல் இனி என் குறை ⋆
வேத நாவர் விரும்பும் ⋆
திருக்கண்ண புரத்தாதியானை ⋆
அடைந்தார்க்கு ⋆
அல்லல் இல்லையே ‖ **9.10.9** ‖

இல்லை அல்லல் ⋆
எனக்கேல் இனி என் குறை ⋆
அல்லி மாதர் அமரும் ⋆
திருமார்பினன் ⋆
கல்லில் ஏய்ந்த மதிள் சூழ் ⋆
திருக்கண்ண புரம் சொல்ல ⋆
நாளும் துயர் ⋆
பாடு சாராவே ‖ **9.10.10** ‖

‡ பாடு சாரா ⋆
வினை பற்றற வேண்டுவீர் ⋆
மாட நீடு ⋆
குருகூர்ச் சடகோபன் ⋆
சொல் பாடலான தமிழ் ⋆
ஆயிரத்துள் இப்பத்தும் பாடி ஆடி ⋆
பணிமின் அவன் தாள்களே ॥ **9.10.11** ॥

## திருமங்கையாழ்வார் அருளிச்செய்த – சிறிய திருமடல்

கணமங்கை
காரார் மணி நிறக் கண்ணனூர் விண்ணகரம் ⋆
சீரார் கண புரம் சேறை திருவழுந்தூர் ⋆
காரார் குடந்தை கடிகை கடல் மல்லை ⋆
ஏரார் பொழில் சூழ் இடவெந்தை நீர்மலை ⋆
சீராரும் மாலிரும் சோலை திருமோகூர் ॥ **37** ॥

## திருமங்கையாழ்வார் அருளிச்செய்த – பெரிய திருமடல்

கணபுரத்துப்
பொன் மலை போல் நின்றவன் தன் பொன் அகலம் தோயாவேல் ⋆
என் இவை தான் வாளா எனக்கே பொறை ஆகி ⋆
முன் இருந்து மூக்கின்று மூவாமைக் காப்பதோர் ⋆
மன்னு மருந்தறிவீர் இல்லையே ॥ **50** ॥

நான் வணங்கும்
கண்ணனைக் கண்ணபுரத்தானை ⋆
தென் நறையூர் மன்னு மணி மாடக் கோயில் மணாளனை ⋆
கல் நவில் தோள் காளையைக் கண்டாங்குக் கை தொழுது ⋆

என் நிலைமை எல்லாம் அறிவித்தால் எம் பெருமான் ⋆
தன் அருளும் ஆகமும் தாரானேல் ‖ **73** ‖

**திரு கண்ணபுரநாயகி சமேத நீலமேகபெருமாள் திருவடிகளே சரணம்**